# NSW HEALTH

## COVID-19 Key Points – Tuesday 10 August 2021

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 ஆகஸ்ட் 10-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 356 புதிய கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றுக்கள் நியூ சவுத் வேல்ஸ்-ல் பதிவாகியுள்ளன. குறைந்தது 57 நோய்த்தொற்றாளர்கள் சமூகத்தில் தொற்றுவிளைவிக்கக்கூடியவர்களாக இருந்துள்ளனர், அத்துடன் 157 பேருடைய தனிமைப்படுத்தல் நிலைமை பற்றி விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.
- பரிதாபகரமாக, கடந்த ஓர் இரவில் நான்கு மரணங்கள் நிகழ்ந்துள்ளன.
- நோய்த்தொற்றாளர்கள் அதிகமாக அதிகரித்து வரும் பகுதியாக, கன்டர்பரி-பாங்ஸ்டவுன் (Canterbury-Bankstown) பகுதி உள்ளது.
- நீங்கள் உங்கள் வீட்டை விட்டு வெளியேறும் ஒவ்வொரு தடவையும், நோய்த்தொற்று உள்ள ஒருவருடன் தொடர்புக்கு உள்ளாகிறீர்கள் என்று அனுமானித்துக்கொள்ளுங்கள். வேறு வழிமுறைகளைவிட, நோய்த்தொற்றுக்களைக் குறைவாக வைத்திருக்க, பொதுமுடக்கம் (lockdown) உதவுகிறது, ஆனால் டெல்டா திரிபு நோய்க்கிருமியானது, தொடர்ந்தும் ஒரு உண்மையான அச்சுறுத்தலாகவே இருக்கிறது.
- தடுப்பூசி என்பது, நோய்ப்பரவலைக் குறைப்பதற்கும் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதைத் தடுப்பதற்குமான ஒரு முக்கிய கருவி என்பதை நாங்கள் அறிவோம். தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன்வருவதன் மூலம், உங்களையும், உங்கள் குடும்பங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும், அத்துடன் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்கவும். 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய எவரும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம். நீங்கள் Vaccine Eligibility Checker-க்குச் செல்லலாம் அல்லது உங்களுக்கு அருகில் உள்ள முன்பதிவுச் சந்திப்புகளைக் கண்டறிய Hot Doc-ஐப் பயன்படுத்தலாம்.
- அதிகமான தடுப்பூசி போட்டுக்கொள்ளும் விகிதங்கள், எங்களுக்கு கூடுதல் சுதந்திரத்தை அளிக்கும். அடுத்த வார இறுதியில் 5 மில்லியன் தடுப்பூசிகளையும், ஆகஸ்ட் மாத இறுதிக்குள் 6 மில்லியன் தடுப்பூசிகளையும் எட்டும் என்று நியூ சவுத் வேல்ஸ் நம்புகிறது. தற்போதைய நோய்ப்பரவலால் ஏற்பட்டுள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டு, உங்களது இரண்டாவது அஸ்ட்ராசெனீக்கா மருந்தளவை (டோஸ்) பெற்றுக்கொள்ளும் காலத்தை, 4 வாரங்களுக்கு முன்னோக்கி கொண்டு வருமாறு ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

Translated By WSLHD Translation Service, 10 August 2021
Tamil